# கிறிஸ்தவ கீர்த்தனைகளில் இடம்பெற்றுள்ளதும் <u>மேல்நாட்டு மிஷனெரியார்</u> இயற்றியதுமான சில தமிழ்ப்பாடல்கள்

**1)** REV J.S. CHANDLER of Ameician Mission – Kodaikanal

இவர்கள் இயற்றியதும் நமது கீர்த்தனையில் முன்பு இடம் பெற்றுள்ளதுமான பாடல்.

**203 (241)**

''பாவப்பாரில் உன்னதசமாதானம்
தேவ வாக்கிதுவல்லலோ?

இப்பாடலை கிறிஸ்துவைச் சேர்தல் என்ற தலைப்பில் காணலாம்.

**2) Rev A. Webb:**

இவர்கள் இயற்றி ''பிழையுணர்ந்தோதல்' என்ற தலைப்பின் கீழ் தரப்பட்டுள்ள பாடல்

**155 (184)**

''பாவியாகவே வாரேன். பாவம் போக்கும்
பலியாம் என் யேசுவே வாரேன்

இப்பாடலை நாம் திருவிருந்து ஆராதனையின் போது பாடி வருகிறோம்.

**3) Rev Fr. Beschi – வீரமா முனிவர்**

தமிழ்நாட்டின் தென்பகுதியில் கத்தோலிக்க திருச்சபை பெருமளவில் உருவாகி வளர காரணமானவர்கள் Rev. Fr. BESCHI என்ற வீரமாமுனிவர் அவர்கள். இவர்கள் இயற்றிய பாடல் 39 (41) கிறிஸ்துவின் சரிதை என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ளது.

''ஜகநாதா , குருபரநாதா , திரு
அருள்நாதா, ஏசுபிரசாதா நாதா

இப்பாடல் தமிழ் இசையிலும் தாளத்திலும் சிறந்து விளங்கும் ஒர் அருமையான பாடலாகும்.

4) **Rt. Rev. Robert – Caldwell** – Bishop of Tinnevelly SPG Congregation from 1877 – 1891. Earlier SPG Missoineray at Idayangudi from 1841
இவர்கள் இயற்றி திருநெல்வேலி பேராய சபைகளில் பாடப்பட்ட பாடல்
''ஏசையா, பிளந்த ஆதிமலையே, மோசநாளில்

பல்லவி

உன்னில் ஒளிப்பேனே
மோசமுள்ள பாவ நோய் முழுதும் என்னில்தீர் ஐயா
தோஷம் நீக்கும் இருமருந்தாகும்.

அனுபல்லவி

சொரிந்த உதிரம் நீருமே..

இவர்கள் தனது கடின உழைப்பாலும் மாறுபட்ட சீதோஷணத்தாலும் உடல் பாதிக்கப்பட்டு கொடைக்கானலில் ஓய்வு எடுக்கும் போது மாலை நேரங்களில் வராந்தாவில் சாய்வு நாற்காலியில் அமர்ந்து சிருஷ்டிப்பின் மகிமையை தியானித்த நேரம். சற்று தொலைவில் தெரிந்த Pillar Rock ஐயும் தனது சரீர பாதிப்பையும் இணைத்து இயற்றிய பாடல் இது. முதல் பதிப்புகளில் இடம் பெற்றிருந்த இப்பாடல் பிந்தய பதிப்புகளில் விடப்பட்டுவிட்டது.

**M.A.நெல்சன்**
நெல்லைப் பேராய உபதேசியார் ஒருவரின் மகன்
நெல்லைப் பேராய அலுவலகத்தில் 1945 முதல்
1958 வரை பணியாற்றியுள்ளார்.
29.08.2012.